**செய்தி வெளியீடு எண்: 812** **நாள்: 19.11.2019**

**<u>செய்தி வெளியீடு</u>**

**"மகளிர் தொழில்முனைவோருக்கான நிதி மேலாண்மை குறித்து ஒரு நாள் இலவச பயிற்சி"**

தமிழ்நாடு தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், (www.editn.in) (தமிழ்நாடு அரசின் தன்னாட்சி நிறுவனம்) கிண்டி சிட்கோ தொழிற்பேட்டையில் இயங்கி வருகிறது.

தற்பொழுது தொழில் நடத்திக்கொண்டிருக்கும் தொழில்முனைவோர்களுக்காக, **"மகளிர் தொழில்முனைவோருக்கான நிதி மேலாண்மை குறித்து ஒரு நாள் இலவச பயிற்சி"** வரும் 21.11.2019 அன்று காலை 10.00 மணி முதல் 5.00 மணி வரை, தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், சிட்கோ தொழிற்பேட்டை, பார்த்தசாரதி கோயில் தெரு, ஈக்காட்டுத்தாங்கல், சென்னை– 600 032 என்ற விலாசத்தில் நடைபெற உள்ளதால், தொழில் செய்து வரும் தொழில் முனைவோர்கள், வருகை தந்து பயன் அடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் இப்பயிற்சியில் சேர விரும்புவோர் தங்கள் பெயரை தமிழ்நாடு தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தில் நேரிலோ அல்லது இணைதளம் மூலமாகவோ பதிவு செய்து கொள்ளலாம்.

இப்பயிற்சி பற்றிய கூடுதல் விவரங்களை பெற விரும்புவோர் அலுவலக வேலை நாட்களில் (திங்கள் முதல் வெள்ளி வரை) காலை 10 மணி முதல் மாலை 5.45 மணி வரை தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி மற்றும் கைபேசி எண்கள்.

| | |
|---|---|
| தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், சிட்கோ தொழிற்பேட்டை, பார்த்தசாரதி கோயில் தெரு, ஈக்காட்டுத்தாங்கல், சென்னை – 600 032. | 8668102600, 8668100336<br>www.editn.in |

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**